# திருவல்லவாழ் - ஆழ்வார்கள் அநுபவம்

(மலையாள நாட்டு திவ்யதேசம்)




ஆசிரியர்:

ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்



நன்றி:

1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நாராயணன் ஸ்வாமி - தமிழ் மற்றும் ஸம்ஸ்க்ருத தட்டச்சு உதவி
2. www.anudinam.org - படங்கள் உதவி
3. ஸ்ரீமதி சாரதா ஸ்ரீநிவாஸன் - மின்புத்தகத் தொகுப்பு





# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் முன்னுரை | 1 |
| திருவல்லவாழ் (திருவல்லா) திவ்ய தேசம் | 3 - 16 |








**Thiru Vallavazh -  Kolapiran**

திருவல்லவாழ் - கோலப்பிரான்





ஸ்ரீ:

திருவல்லவாழ் - ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)

******

ஜய வருஷம் – பங்குனி மாதம் – ரேவதி நக்ஷத்ரம் – ஸ்ரீ ரங்கநாதர் திருவவதார தினம் - யுகாதி பண்டிகை - March 31st, 2013

****

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம். ஸ்ரீரங்கநாதர் திருவவதார தினமான இந்த சுபமான பங்குனி ரேவதி தினத்தில், ஜய ஸம்வத்ஸர யுகாதி பண்டிகையும் சேர்ந்திருக்கும் நன்னாளில் அடியேனுடய ஸமர்ப்பணமாக இந்த மின் - புஸ்தகத்தை வெளியிடுவதை அடியேனின் பாக்கியமாக கருதுகிறேன்.

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த போது 1992 செப்டம்பர் தொடங்கி மார்ச் 1993 வரை வேலை நிமித்தமாக பல வெளிநாடுகளுக்கு ப்ரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் பகவத் சிந்தனை விடாமலிருக்க 108 திவ்ய தேசங்களைப்பற்றியும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பற்றியும் ,வேத வேதாந்தங்களைப் பற்றியும் ஏற்பட்ட எண்ணங்களின் கருத்து-கோவையை ஒரு நூல் வடிவமாக எழுதியது நேற்று நடந்தது போல் பசுமையாக நினைவில் நிற்கிறது.

பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்போது அந்த நூலில் இருந்து ஒரு பகுதியாக , மலையாள நாட்டு திவ்ய தேசமான திருவல்லவாழ் (திருவல்லா) பற்றி ஆழ்வார்களின் மங்களாசாஸனங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாச்சாரி சடகோபன்







ஸ்ரீ கோலப்பிரான் (Courtesy: www.anudinam.org)





ஸ்ரீ:

திருவல்லவாழ் - ஆழ்வார்கள் அநுபவம்

(மலையாள நாட்டு திவ்யதேசம்)

ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )

*****

மலைநாட்டு திருப்பதிகள் : திருவல்லவாழ் (திருவல்லா)

அழகிய த்வஜ ஸ்தம்பமுடைய இக்கோயிலில், கோலப்பிரான் என்ற பெருமாள், (செல்வத்திருக்கொழுந்து) வாத்ஸல்ய நாச்சியாருடன் சதுரங்க விமான நிழலில் ஸேவை தருகிறார். நம்மாழ்வாரின் 11 பாசுரங்களையும், திருமங்கை மன்னனின் 11 பாசுரங்களையும் பெற்ற திருப்பதி இது. மூல ஸ்தானத்தில் ஸுதர்சன சக்ரம் பிரதிஷ்டை பண்ணப் பட்டுள்ளது . ஸன்னதியுள் பெண்கள் அனுமதிக்கப் படுவதில்லை. தூரத்திலிருந்தே, அவர்கள் பகவானின் ரூபத்தை தர்சித்துக் கொள்கிறார்கள். பெருமாள் ஸன்னதியில் விபூதி ப்ரஸாதம் கொடுக்கப் படுகிறது.

திருமங்கை தனது பெரிய திருமடல் பாசுரப் பகுதியில் "வல்லவாழ் பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியை ,தொன்னீர்க் கடல் கிடந்த தோளா மணிச் சுடரை "தான் மடல் பிடித்து பின்னே போவதாகச் சொன்னார். திருவல்லவாழில் நப்பின்னை பிராட்டிக்கு நாதனாக விளங்கும் கோலப்பிரானை, திருப்பேர் நகர் பெருமானுடன் சேர்த்து திருமங்கை மங்களாஸாசனம் செய்தார்.

திருமங்கை, பெரிய திருமொழியின் ஒன்பதாம் பத்து, ஏழாம் திருமொழியில் திருவல்லவாழ் என்ற திருப்பதியை ஸேவிக்க நீ உறுதியடைவாயாக என்று தன் மனதிடம் சொன்னார். இப்பாசுரங்களை "வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே", என முடித்தார். திருவல்லவாழ் என்ற திருப்பதியை சொல்வதனால், வலிமையுள்ள (சக்தி நிரம்பிய) வாழ்க்கையை நீ பெறலாம் எனபதை அறிந்து இரு என்றார்.

முதல் பாசுரத்தில், பெற்றோர்களும், மக்களும், மற்ற உறவினர்கள் எல்லோரையும் முக்கியமென நம்பி ஸம்ஸாரம் என்ற விலங்கை கையில் மாட்டிக் கொண்டு இருப்பது ஈனமான காரியம் என்று நினைத்தாயேயானால், ப்ரளயத்திற்கு காரண பூதனாகவும் ,



உயிர்களின் படைப்பிற்கு மூல காரணனுமான பால கோபாலன் வாழும் திருவல்லவாழ் என்ற திருப்பதியைப் பாடிப் போற்றி, மனோதைர்யம் அடை எனப் பின் வருமாறு சொன்னார்:

தந்தைதாய் மக்களே சுற்றமென்றுற்றவர் பற்றி நின்ற,

பந்தமார் வாழ்க்கையை நொந்து நீ பழியெனக் கருதினாயேல்,

**அந்தமாய் ஆதியாய் ஆதிக்கும் ஆதியாய் ஆயனாய,**

**மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே.**



திருப்பேர்நகர் அப்பக்குடத்தான் (Courtesy:www.anudinam.org )

அடுத்த மூன்று பாசுரங்களினால், பெண்களால் ஏற்படும் சிற்றின்பத்தையே பேரின்பமாக நினைத்து மதி மயங்கி நிற்பதற்கு அஞ்சினால், “மன்னனார் வல்லவாழ் ,மாணியார் வல்லவாழ், முந்நீர் வண்ணனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே”, என்று திருமங்கை தன் மனதிடம் ப்ரார்த்தித்தார். மின்னல் போல் மெல்லிய இடை உடைய அன்ன



நடையினர் சேர்க்கையை வெறுத்து, என் செய்வேன் என்று அஞ்சினால், பஞ்ச பாண்டவர்க்காக, துஷ்டனான துர்யோதனிடம் தூது சென்ற ராஜாதி ராஜனை, திருவல்லவாழ் திருப்பதியில் இருப்பவனாக நினைத்து உன் பயத்தை அழித்துக் கொள் எனப் பின் வருமாறு சொன்னார்:

மின்னுமாவல்லியும் வஞ்சியும் வென்ற நுண்ணிடை நுடங்கும்.

அன்னமென்னடையினார் கலவியை அருவருத்தஞ்சினாயேல்,

துன்னுமாமணிமுடிப் பஞ்சவர்க்காகி முன் தூது சென்ற,

மன்னனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே.

எவ்வளவு ப்ராக்ரமும், பெருமையும் உள்ள மன்னர்கள் ஆயுள் முடிந்து இறந்தார்கள் , இனி யார் இந்நாட்டை ரக்ஷிக்கப் போகிறார்கள் என்று பயப்பட்டால், திருவல்லவாழ் பெருமானே எல்லா அபாயங்களிலிருந்தும் நம்மைக் காப்பாற்றி அருள்வான் என நம்பி இரு என்று தன் மனதுக்கு பின் வருமாறு ஆறுதல் சொன்னார்:

மஞ்சு தோய் வெண்குடை மன்னராய் வாரணம் சூழ வாழ்ந்தார்,

துஞ்சினாரென்பதோர் சொல்லை நீ துயரெனக் கருதினாயேல்,

நஞ்சுதோய் கொங்கை மேல் அங்கை வாய் வைத்து அவள் நாளையுண்ட,

மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே.

ஆறாவது பாசுரத்தில், “திருவினார் வேத நான்கைந்து தீ வேள்வியோடங்கம் ஆறும் மருவினார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே”, என்றார். ஞான ஸம்பத் நிறைந்த நான்கு வேதங்கள், பஞ்ச யஞங்கள், ஆறு வேதாங்கங்கள், இவைகளில் பாண்டித்யம் கொண்ட மஹான்கள் வாழும் திருவல்லவாழ் என்ற திருப்பதியை சொல்லும் விதத்திலே வல்லமை பெற்று அன்புடன் இரு எனத் தன் மனதிடம் கூறினார்.

ஏழாவது பாசுரத்தில், எல்லா விதமான வியாதிகளுக்கும் வசமாகும் இந்த அழியக் கூடிய உடலை உயரியதாக நினைத்து, அந்த உடலை அழியாத வஸ்து என நினைத்து மயங்கும் வீணர்களின் பேச்சுக்களைக் கேட்க விரும்பாது பிழைக்க வேண்டும் என்று நினைத்தால், அனல் வீசும் ஸூர்யனாகவும், குளிர்மதி சந்திரனாகவும், வானை முட்டும் பெரிய மேகமுமாகி நிற்கும் மாயாவியான கோலப்பிரான் வாழும் திருப்பதியை சொல்லும் விதத்திலே சக்தி பெற்று ,அமைதியுடன் இரு எனப் பின் வருமாறு தன் மனதிடம் கூறினார்:





பாண்டவ தூதப் பெருமாள்

நோயெலாம் பெய்ததோர் ஆக்கையை மெய்யெனக் கொண்டு ,வாளா

பேயர் தாம் பேசும் அப்பேச்சை நீ பிழையெனக் கருதினாயேல்,

தீயுலா வெங்கதிர் திங்களாய் மங்குல் வானாகி நின்ற

மாயனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே.

தான் மங்களாஸாசனம் செய்த திருவல்லவாழ் பற்றிய பாசுரங்களை அப்யஸிப்பவர்கள், சக்தி உள்ள அரசர்களாகி, இப் புவனியை ஆள்வர் எனப் பின் வருமாறு சொன்னார்:

மறைவலார் குறைவிலார் உறையுமூர் வல்லவாழடிகள் தம்மை,

சிறைகுலா வண்டறை சோலைசூழ் கோல நீளாலி நாடன்,

கறையுலா வேல்வல்ல கலியன் வாயொலியிவை கற்று வல்லார்,

இறைவராய் இருநிலம் காவல்பூண்டு இன்பம் நன்கெய்துவாரே.



திருக்குடந்தை ஆராவமுதப் பெருமாள் (Courtesy: www.anudinam.org )



நம்மாழ்வார் ஸேவித்துக் கொண்ட திருவல்லவாழ் கோலப்பிரான்:

திருக்குடந்தை ஆராவமுதனை ஸேவித்துக் கொண்டப்பின், நம்மாழ்வாருக்கு மலையாள நாட்டில் திருவல்லவாழ் என்ற திருப்பதியில் கோயில் கொண்டுள்ள கோலப்பிரானின் நினவு ஏற்படுகிறது. உடனே நாயகி பாவமும் மேலிட்டு, தன் நாதனுடன் என்று சேர்வேன் என பராங்குச நாயகி கேட்டாள். தோழிகளிடம் சம்பாஷிக்கும் வகையில் இப்பாசுரம் அமைந்தது. பாசுர வாக்யங்கள் பின் வருமாறு:

மானேய் நோக்கு நல்லீர்! வைகலும் வினையேன் மெலிய,

வானார் வண்கமுகும் மதுமல்லிகை கமழும்,

தேனார் சோலைகள் சூழ் திருவல்லவாழ் உறையும்

கோனாரை ,அடியேன் அடி கூடுவதென்று கொலோ?

குட்டி புள்ளி மானுடைய அழகுக்கு சரி சமானமான அழகுடைய நங்கைகளே! வினைகள் மிகுந்த நான், அவன் பிரிவால் மெலிந்து, துர்பாக்யவதியாக உள்ளேன். என்னை இந்த மெலிந்த நிலையில், பாக்கு மரங்களும், தேன் பெருகும் மல்லிகை கொடிகளும் கலந்து , பரிமள கந்தம் மிகுந்த சோலைகள் சூழப் பெற்ற திருவல்லவாழ் திருப்பதிக்கு போக வேண்டாம் என்று சொல்வதர்கஞ்சி, மானைப் போல் பயந்த கண்களுடன் இருக்கிறீர்களோ எனத் தோன்றுகிரது. மல்லிகைக் கொடி பாக்கு மரத்தை தழுவி நிற்கிறது. அந்த திருவல்லவாழ் மல்லிகையின் மணம், பல காத தூரம் வீசுகிறது. இவ்வளவு ரம்யமான க்ஷேத்ரத்தில், நான் இருக்கிறேனோ, இல்லையோ என்று நினக்காது வல்லவாழ்க்கை நடத்தி வரும் திருவல்லவாழனை நினத்து நானும் உருகுகிறேன். அவனுடைய ஸேவா கைங்கர்யத்தில் ஈடுபடும் பாக்யம் கிட்டாத நான், என்று அவன் ஸமீபம் சேர்வேன்? அடியாளாகிய நான் என்று அவன் திருவடியில் வீழ்ந்து நமஸ்கரித்துக் கொள்வேன் என பராங்குச நாயகி இங்கு கேட்டாள்.

அவனுடைய திருவடித் தூளை என் சிரஸ்ஸில் சேர்த்துக் கொள்ளும் பாக்யம் என்று கிடைக்கும் எனப் பிரிவாற்றாமை மிகுந்த நாயகி, தனது தோழிகளிடம் பின் வருமாறு கேட்டாள்:

என்றுகொல் தோழிமீர்காள் எம்மை நீர் நலிந்தென் செய்தீரோ?

பொன்திகழ் புன்னைமகிழ் புது மாதவி மீதணவித்





தென்றல் மணம் கமழ் திருவல்லவாழ் நகருள்,

நின்ற பிரான் அடி நீறடியோங் கொண்டு சூடுவதே .

தோழிகளே! எனக்கு உதவப் போகிறேன் என்று ஒருபுறம் சொல்லிக் கொண்டு மற்றொரு புறத்தில், திருவல்லவாழ் கோலப்பிரானிடம் என்னைக் கூட முடியாதபடி உபத்ரவித்து வருகிறீர்களே? பொன் போல் பிரகாசிக்கும் புன்னைப் புஷ்பம், மகிழம்பூ, குருக்கத்திப்பூ என்றவைகளின் கந்தங்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, தென் திசை வீசும் மந்த மாருதம் நிறைந்த திருவல்லவாழ் பிரானை அணுகுவதற்கு உபஹாரம் செய்யாமல் , அபஹாரத்தில் ஈடுபட்டு என்னைத் தடுத்துக் கொண்டு நிற்கிறீர்களே! இது மாதிரி தப்பு காரியத்தில் ஈடுபட்டு பாவத்தை சேர்த்துக் கொள்ளாமல், திருவல்லவாழ் நீங்களாவது சென்று , அவன் பாதாங்க்ரி ரேணுவைக் கொண்டு வந்து, மெலிந்து வாடி நிற்கும் என் சிரஸ்ஸில் சேர்த்தீர்களானால், உங்களுக்கு புண்ணியமாகுமே! உங்களுக்கு புரியவில்லையே என நாயகி இடித்துக் கூறினாள்.

நம்மாழ்வார் கோலப்பிரானின் திருப்பதி அழகை விவரிப்பது ஆச்சர்யமான கவிதா சக்தியால் ஏற்பட்டவை. அந்த திருவல்லவாழின் ஸௌந்தர்யத்தையும், ஸௌபாக்யத்தையும் விவரிக்கும் பாசுரப் பகுதிகள் பின் வருமாறு:

பாடு நல் வேதவொலி பரவைத்திரை போல் முழங்க,

மாடுயர்ந்தோமப்புகை கமழும் தண் திருவல்லவாழ்

....... ....... ........ ........ ........... ........ ....... ........ .........

பச்சிலை நீள்கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்

மச்சணி மாடங்கள் மீதணவும் தண் திருவல்லவாழ்,

....... ....... ........ ........ நல்லவந்தணை வேள்விப்புகை,

மைந்நலங் கொண்டுயர் விண் மறைக்கும் திருவல்லவாழ்,

....... ....... ........ ........ ........... ........ ....... ........ .........

பாண்குரல் வண்டினொடு பசுந்தென்றலுமாகி யெங்கும்,

சேண் சினையோங்கு மரச் செழுங்கானல் திருவல்லவாழ்,

....... ....... ........ ........ ........... ........ ...... ........ .........





ஓத நெடுந்தடத்துள் உயர் தாமரை செங்கழுநீர்,

மாதர்கள் வாண்முகமும் கண்ணுமேந்தும் திருவல்லவாழ்,

....... ....... ........ ........ ........... ........ ....... ........ .........

ஆடுறு தீங்கரும்பும் விளை செந்நெலுமாகி யெங்கும்

மாடுறு பூந்தடஞ்சேர் வயல் சூழ் தண் திருவல்லவாழ்,

....... ....... ........ ........ ........... ........ ....... ........ .........

தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழ நின்ற திருநகரம் ,

நல்லருளாயிரவர் நலனேந்தும் திருவல்லவாழ்.

திருவல்லவாழ் என்ற திருநகரத்தில் தான் கண்ட மங்களக் காட்சிகளை பராங்குச நாயகி இங்கு விவரித்தாள். அங்கு வெகு தூரத்தில் உள்ள கடலின் மெலிந்த அலைகள் ஏற்படுத்தும் கோஷத்திற்கு சமானமான ஸாம கான மெல்லிசையை அவள் கேட்டாள். அதற்கேற்ப மாடங்கள் வரை உயர்ந்த யாகப் புகை, ஹவிஸ்ஸுகளின் பரிமள கந்தங்களுடன் கலந்திருப்பதையும் கண்டாள். மேலும் அங்கு பசுமையான இலைகளுடன் கூடிய பாக்கு மரங்கள், பலா மரங்கள், தென்னை மரங்கள், வாழை ஆகியவை உயர்ந்து நின்று, அவைகள் அடியில் குளிர்ந்த நிழலை மக்களுக்கு உதவுவதற்காக கொண்டிருப்பதையும் அறிந்தாள். மையின் கரு நிறத்துடன் யாகங்கள் மூலம் எழுந்து, விண்ணை மறைக்கும் அளாவியுள்ள ஹோமப் புகையையும் மறுபடி கண்டாள்.

அந்த அழகிய ஊரில், கோலப்பிரானை கான ரூபமான ரீங்காரத்துடன் வண்டுகள் துதிப்பதைக் கேட்டாள். குளிர்ந்த இளம் தென்றல் காற்றும் மிருதுவாக வீசுவதைப் பார்த்தாள் ; அழகிய கடற்கரை சோலைகளில், உயர்ந்த வ்ருக்ஷங்கள், கிளைகள பல திக்குகளிலும் பரப்பிக் கொண்டு திகழ்வதையும் கண்டாள். விசாலமான பல தடாகங்களுள் தாமரைப் பூக்களையும் ,செங்கழுநீர் புஷ்பங்களையும் ,அழகிய பெண்மணிகளின் ஒளி வீசும் முகங்களின் பிரதிபலிப்புகளையும் பார்த்தாள். தித்திப்பு மிகுந்த கரும்பு செடிகளையும் ,அவைகளின் நடுவே பசுமையான செந்நெல் பயிர்களையும் அத் திருப்பதியில் கண்டு, அந்த கோலப்பிரானின் பழமையான் அருளால், அத் திருப்பதி மிகுந்த ச்ரேயஸ்ஸுகளுடன் இருப்பதை புரிந்து கொண்டாள்.

அப்பேற்பட்ட" நாமங்களாயிரம் உடைய திருவல்லவாழ்" நாதனின் ஸாமீப்யம் கிட்டி, "நல் அருள் நம் பெருமான் நாராயணன்" தன் பெயர்களை ஓதும் பாக்யம், அதனுடைய






அனாதியான கிருபையாலே கிட்டுமா என யோசித்தாள். "திருவல்லவாழ் நீடுறைகின்ற பிரான் நிலந்தாவிய நீள் கழலே, நாடொறும் வீடின்றியே தொழக் கூடுகொல்" என்று ஆலோசித்தாள்.



பராங்குசநாயகி திருக்கோலம் - ஸ்வாமி நம்மாழ்வார் - ஸ்ரீரங்கம்





திருவல்லவாழ் என்ற பெயருக்கேற்ப, இத் திருப்பதியின் செழிப்பையும் அங்கு குடி கொண்டவர்களின் வேத பரம்பரயும், ஞானாநுஷ்டங்களையும் பராங்குச நாயகி இப் பாசுரங்களில் ஸேவித்துக் கொண்டாள். அப்பேற்ப்பட்ட மங்களங்கள் நிலைத்திருக்கும் திருவல்லவாழில், கரும்பு ரஸத்திலிருந்து ஏற்பட்ட வெல்லக் கட்டிபோல் சுவை நிறைந்துள்ள இன் அமுதனை என் புறக் கண்களால் என்று கண்டு களிப்பேன்? அந்த வெல்லத்தால் ஆன கனி, எனது ஸ்வரூப விசேஷங்கலையும், ஆத்ம குணங்களையும் தன் அம்ருத ஸ்வாபவத்தால் கொள்ளை கொண்டு போய் விட்டது எனப் பின் வருமாறு சொன்னார்:

நன்னலத் தோழிமீர்காள்! நல்லவந்தணர் வேள்விப்புகை,

மைந்நலங்கொண்டுயர் விண் மறைக்கும் தண் **திருவல்லவாழ்.**

**கன்னலங்கட்டி** தன்னைக் கனியை யின்னமுதந்தனை,

என்னலங்கொள் சுடரை என்று கொல் காண்கள் காண்பதுவே.

அடுத்த பாசுரத்தில், திருவல்லவாழ் என்ற திருப்பதியில் வாமனப் ப்ரஹ்ம்மசாரி ரூபம் எடுத்து நிற்கும் கோலப்பிரானின் பொற்றாமரை அடிகளை, புறக் கண்கள் மூலம் ஆசை தீர எப்போது பார்க்கும் பாக்யம் கிடைக்குமோ என்று பராங்குச நாயகி, "திருவல்லவாழ் மாண்குறள் கோலப்பிரான் மலர்த் தாமரைப் பாதங்களே, காண்பதெஞ்ஞான்று கொலோ? " என்ற பாசுரப் பகுதி மூலம் கேட்டாள்.

ஏழாவது பாசுரத்தில், திருவடியைக் கண்டு, ஆனந்திப்பது மாத்திரம் போதாது, அந்த திருவடிகளை தினமும் தூமலர் தூவித் தொழும் பாக்யம் எப்போது கிட்டும் எனப் பின் வருமாறு வினவினாள்:

திருவல்லவாழ் நாதன் இஞ்ஞாலமுண்ட

நம்பிரான் தன்னை நாடொறுமே,

பாதங்கள் மேலணி பூந்தொழக் கூடுங்கொல்?

அவனுடைய பூவினும் மென்மையான பாதங்களை, அழகிய பூவெடுத்து தொழுது, கால் சிலம்புகள் மறையும் உயரத்திற்கு புஷ்பங்களால் ஆராதிக்கும் பாக்யம், எனக்கு என்று கிடைக்கும் என ஆதுரப்பட்டாள். திருவல்லவாழ் நீடுறைகின்ற பிரானுடைய "நிலம் தாவிய நீள் கழலே, நாடொறும் வீடின்றியே தொழக் கூடுங்கொல்" என்று கூறி, தன் அந்தரங்க அபிலாஷையை வெளியிட்டாள். பூமியை அளந்த அந்த ஆச்ரித ரக்ஷணத் திருவடிகளை இடைவிடாது தொழும் ஸௌபாக்யம் என்று கிட்டும் என நினைத்து வருந்தினாள்.







நம்பெருமாள் நாராயணன்





“நாமங்களாயிரம் உடைய திருவல்லவாழ்” நம் பெருமானடியை தொழுவது மாத்திரம் அல்லாது, அவனது திருநாமங்களை ஓதும் பரமபாக்யம் அவனருளால் என்று கிடைக்கப் போகிறது எனப் பத்தாவது பாசுரத்தில் பின் வருமாறு தோழிகளிடம் கேட்டாள்:

**தொல்லருள் நல்வினையால் சொல்லக்கூடுங்கொல்** தோழிமீர்காள்,

தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழநின்ற திருநகரம்,

நல்லருளாயிரவர் நலனேந்தும் **திருவல்லவாழ்.**

**நல்லருள் நம்பெருமான் நாராயணன் நாமங்களே.**

“தொல் அருள் நல் வினையால்” சொல்லக் கொடுத்து வைத்திருக்க வேணும் என்று நாயகி பகவானின் ஸஹஸ்ரநாம பாராயண பாக்யத்தைக் குறிப்பிட்டாள். “ஈச்வர: ஸர்வ பூதானாம்” என்று உபநிஷத் வணங்கும் பகவானுடைய அருளாலும், “தேவீஹ்யேஷா குணமயீ” என்ற பெரிய பிராட்டியின் பழமையான கிருபைகளாலும் (அனுக்ரஹ விசேஷங்களாலும்), ”நம் பெருமான் நாராயணன்” நாமங்களைப் பாடும் பாக்யம் கிடைக்கும். அந்த ப்ரதான புருஷேச்வரனுடைய திருவருள் தேவியின் அனுக்ரஹத்தால் நமக்கு கிடைக்காவிடில், நம்மை பீடித்திருக்கும் மாயை விலகாது என்று விஷ்ணு தத்வம் சொல்வதை, பராங்குச நாயகி நினைத்திருந்தாள் போலும்!

तत्कृतायास्तु मायायाः तत्प्रसादं विना क्वचित् ।

नास्ति निर्णाशने हेतुः संक्षिप्यैतत् प्रभाषितम् ॥

தத் க்ருதாயாஸ்து மாயாயா :தத் ப்ரஸாதம் விநா க்வசித்|

நாஸ்தி நிர்ணாசநே ஹேது :ஸம்க்ஷிப்யைதத் ப்ரபாஷிதம்||

என விஷ்ணு தத்வம் கூறியது.

( **கருத்து)** :பகவானுடைய தொல் அருள் நல்வினை இல்லையேல், ஸம்ஸாரமாகிற மாயையை எந்த விதத்தாலும் விலக்க முடியாது. இந்த மாயை அவன் உண்டு பண்ணியது. அவனருளால் தான் அது அகலும் என்பது ஸத்யம்.

பகவானே ஸம்ஸாரமாகிற மாயை என்ற விலங்கை அழிக்கும் காரண பூதன் என்பதை ச்வேதச்வதார உபநிஷத்,





संसारमोक्षस्थितिबन्धहेतुः  ஸம்ஸார மோக்ஷ ஸ்திதி பந்தஹேது :

என்ற வாக்ய மூலம் விளக்குகிறது. தன் தொல் அருளால், மாயையில் கட்டுப் பட்டிருக்கும் ஜீவனை விடுவிக்கிறான் என கூர்ம புராணமும்,

तदिच्छया यतो ह्यस्य बन्धमोक्षौ प्रतिष्ठितौ

ததிச்சயா யதோ ஹ்யஸ்ய பந்தமோக்ஷௌ ப்ரதிஷ்டிதௌ

எனக் கூறியது. இவைகளுக்கெல்லாம் ஆதாரமான ப்ரஹ்ம ஸூத்ரமும்

पराभिध्यानात्तु तिरोहितं ततो ह्यस्य बन्धविपर्ययौ

பராபி த்யாநாத்து திரோஹிதம் ததோ ஹ்யஸ்ய பந்த விபர்யயௌ

--- ப்ரஹ்ம ஸூத்ரம்3.2.4

என்றது. அவன் அருளாலான புண்ய காரியங்களால், மறைக்கும் மாயையை பகவான் விலக்குகிறான் என ஸூத்ரம் சொல்லுகிறது. அவன் அருளில்லையேன், பிழைக்கும் வழி கிடையாது என நாயகி கூறினாள். அந்த அருள் பெற, லோக பந்துவான நம் பெருமான் நாராயணனின் திருநாமங்களை ஓத வேண்டும். அந்த காரியம் நல்வினையால் தான் ஏற்படும் . அந்த நல்வினைகளை நமக்களிப்பவனும் அவனே என நாயகி கூறி, திருவல்லவாழ் எம் பெருமானிடம் தான் கொண்டிருக்கும் தனிப் பெருங் காதலை இப்பாசுரங்கள் மூலம் வெளிப்படுத்தினாள். நாமும், பராங்குச நாயகி காட்டிக் கொடுத்த வழியில் சென்று "நாமங்களாயிரம் உடைய நம் பெருமானடி" தொழுது, ஸகல க்ஷேமங்களையும் அடைவோமாக!

**श्रीवल्लभ क्षेत्रे पम्पानदी तीरे घण्टाकर्ण पुषकरणी तटे चतुरङ्ग कोल विमानच्छायायां स्थिताय पूर्वाभिमुखाय श्रीमते वात्सल्यवल्ली प्रेमवसूपल्लवितवल्ली** (செல்வத்திருக்கொழுந்து நாச்சியார்) **समेत सुन्दराय** (கோலப்பிரான்) **श्रीवल्लभाय** (திருவாழ்மார்பன்) **परब्रह्मणे नमः**

ஸ்ரீவல்லப க்ஷேத்ரே பம்பாநதீ தீரே கண்டாகர்ண புஷ்கரணீ தடே சதுரங்க கோலே விமானச்சாயாயாம் ஸ்திதாய பூர்வாபிமுகாய ஸ்ரீமதே வாத்ஸல்யவல்லீ





ப்ரேமவஸூபல்லவிதவல்லீ (செல்வத்திருக்கோழுந்து நாச்சியார்) ஸமேத ஸுந்தராய (கோலப்பிரான்) ஶ்ரீ வல்லபாய (திருவாழ்மார்பன்) பரப்ரஹ்மணே நம:

SrIvallabha kshetre pampAnadI tIre ghaNTAkarNa pushakaraNI taTe caturanga kola vimAnacChAyAyAm sthitAya pUrvAbhimukhAya SrImate vAtsalyavallI premavasUpallavitavallI (selvat-tirukkozhundu nAcciyAr) sameta sundarAya (kolappirAn) SrI vallabhAya (tiruvAzhmArban) parabrahmaNe namaH

||சுபம்||

